செ.வெ.எண் : 60 நாள் : 20.01.2011

## இதழ் செய்திக் குறிப்பு

மாநிலத்தின் மாநகரங்கள் மற்றும் நகரங்களில் தற்போதுள்ள போக்குவரத்து நடைமுறைகளை ஆராய்ந்து, நீண்டகால தேவைகளைக் கருத்தில் கொண்டு, போக்குவரத்து நெரிசலை நீக்கி சீரான முறையில் போக்குவரத்தை ஏற்படுத்துவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு நகர் ஊரமைப்புத் துறையால் போக்குவரத்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

போக்குவரத்துத் திட்டத்தைத் தயாரிக்க நகர மையங்களில் ஏற்படும் முக்கிய பிரச்சனையைக் குறிப்பாகக் கண்டறிய ஐந்து மாநகராட்சிகளான கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகியவற்றிற்கு ஒருங்கிணைந்த போக்குவரத்து ஆய்வறிக்கைகளையும் மற்றும் 58 நகரங்களுக்கு போக்குவரத்து செயல்பாடு மற்றும் மேலாண்மைத் திட்டங்களையும் நகர் ஊரமைப்புத் துறை தயாரித்துள்ளது. இம்மேம்பாட்டுத் திட்டங்களை அந்தந்த உள்ளாட்சியே செயல்படுத்த போதிய நிதிவசதி அவற்றிடம் இல்லாதிருக்கும் நிலையில் நகர் ஊரமைப்பு நிதியிலிருந்து மான்யமாக நிதி வழங்கி திட்டங்கள் விரைந்து செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்படி, திட்ட மதிப்பீட்டில் 75 சதவிகிதத்தொகை நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து மான்யமாகவும், மீதம் 25 சதவிகிதத்தொகை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி தனது சொந்த நிதியிலிருந்தும் செலவு செய்ய வேண்டும். அதிகபட்ச மான்யத் தொகையாக ஒரு மாநகராட்சிக்கு ரூ.50.00 இலட்சமாகவும், ஒரு நகராட்சிக்கு ரூ.25.00 இலட்சமாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நகர் ஊரமைப்புத் துறையால் 2009-2010 ஆம் ஆண்டில் மேம்படுத்தப்பட வேண்டிய போக்குவரத்துச் செயல்பாடு மற்றும் மேலாண்மைத் திட்டத்தின்படி கீழ்க்கண்ட 10 நகராட்சிகளுக்கு தலா ரூ.25.00 இலட்சம் வீதம் நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து 75 விழுக்காடு மான்யமாக மொத்தம் ரூ.2.50 கோடி இவ்வரசால் வழங்கப்பட்டுள்ளது.

1. செங்கல்பட்டு
2. இராஜபாளையம்
3. மயிலாடுதுறை
4. உடுமலைப்பேட்டை
5. பட்டுக்கோட்டை
6. திருப்பத்தூர்
7. பரமக்குடி
8. சிதம்பரம்
9. வாணியம்பாடி
10. காரைக்குடி

அசோக் டோங்ரே,
அரசு செயலாளர்.

வெளியீடு, இயக்குநா.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9